# <u>பத்திரிக்கை செய்தி</u>

## *கட்டிட வரைபட அனுமதி வழங்க லஞ்சம் வாங்கிய பேரூராட்சி குடிநீர் அளவுமானி கணக்கீட்டாளர் கோயம்புத்தூர் லஞ்ச ஒழிப்பு துறையினரால் கைது*

கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி தாலுக்கா சூளேஸ்வரன்பட்டியில் உள்ள மணியம்மை வீதியை சேர்ந்த ராமச்சந்திரன் என்பவரது மகன் ஹரிஹரன் வயது-43 என்பவர் அவர் குடியிருந்து வரும் தனக்கு சொந்தமாக சுமார் 1200 சதுரடியில் அமைந்துள்ள ஓட்டு வீட்டினை இடித்துவிட்டு புதிதாக வீடுகட்டுவது நிமித்தம் கட்டிட வரைபட அனுமதி (Plan Approval) பெறுவதற்கான விண்ணப்பத்தினை உரிய ஆவணங்களை இணைத்து கடந்த 23.08.2023-ம் தேதியன்று பொள்ளாச்சி சூளேஸ்வரன்பட்டியிலுள்ள பேரூராட்சி அலுவலகம் சென்று அங்கு கட்டிட வரைபட அனுமதி பெறுவது தொடர்பான வேலைகளை கவனித்துவரும் திரு.நடராஜ், குடிநீர் அளவுமானி கணக்கீட்டாளர் என்பவரிடம் கொடுத்துள்ளார். அவ்விண்ணப்பத்தை பார்வையிட்ட மேற்படி நடராஜ் மேலும் சில ஆவணங்களை கேட்க அவற்றையும் திரு.ஹரிஹரன் தயார்செய்து கொடுத்துள்ளார். அதன் பின்னர் மேற்படி நடராஜின் அறிவுரைப்படி கட்டிட வரைபட அனுமதிக்காக செலுத்தவேண்டிய தொழிலாளர் நலநிதிக்கான அரசுக்கட்டணம் ரூ.11,850/-ஐ கடந்த 30.08.2023-ம் தேதியன்று ஆன்லைனில் செலுத்தி அதற்கான ரசீதுடன் அன்றைய தினமே மேற்படி சூளேஸ்வரன்பட்டியிலுள்ள பேரூராட்சி அலுவலகம் சென்று திரு.நடராஜை சந்தித்து ஆன்லைன் ரசீதுகளை காண்பித்துள்ளார். ரசீதுகளை பார்வையிட்ட திரு.நடராஜ், கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்கு பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.10,450/-ஐ மேற்படி விண்ணப்பதின் பின்புறம் குறித்துவிட்டு மேற்படி தொகையைத்தவிர தனக்கு தனியாக ரூ.5,000/- லஞ்சமாக தரவேண்டும் என்று கேட்டுள்ளார். அதற்கு திரு.ஹரிஹரன் தனது குடும்ப கஷ்டத்தை எடுத்துசொல்லி கொஞ்சம் குறைத்துக் கொள்ளும்படி கேட்டுள்ளார். அதற்கு திரு.நடராஜ் மொத்தமாக ரூ.15,000/- கொடுக்கும்படி கூறியுள்ளார். அதனைத் தொடாந்து 30.08.2023-ம் தேதி மாலை திரு.ஹரிஹரன் ரூ.10,000/-துடன் சூளேஸ்வரன்பட்டியிலுள்ள பேரூராட்சி அலுவலகம் சென்று திரு.நடராஜை சந்தித்துள்ளார். அப்போது திரு.நடராஜ் தான் கேட்ட ரூ.15,000/-ஐ கொண்டுவந்துள்ளீரா என்று கேட்டுள்ளார் அதற்கு திரு.ஹரிஹரன் தான் அரசுக்கான கட்டணம் ரூ.10,000/- கொண்டு வந்துள்ளதாகவும் அதனை பெற்றுக்கொண்டு ரசீது கொடுக்கும்படி கேட்டுள்ளார். ஆனால் நடராஜ் தான் கேட்ட பணம் ரூ.15,000/-ஐ கொடுத்தால் மட்டுமே ரசீது போட்டு கட்டிட வரைபட அனுமதிக்கு ஒப்புதல் வாங்கித்தர ஏற்பாடு செய்துதர முடியுமென கறாராக சொல்லியுள்ளார். அதற்கு திரு.ஹரிஹரன் தனது குடும்ப கஷ்டத்தை எடுத்துக்கூறி கெஞ்சிக்கேட்டுள்ளார். உடனே நடராஜ் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகைக்கு ரசீது போட்டுத் தருவதாகவும் ஆனால் தான்

கேட்ட லஞ்சப்பணம் ரூ.5000/- கொடுத்தால் மட்டுமே அரசுக் கட்டணத்திற்கான ரசீதைக் கொடுத்து, வீடு கட்டுவதற்கான கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்கான ஏற்பாட்டினையும் செய்துதருவதாகவும் அதற்கு மேல் பணத்தை குறைத்துக்கொள்ள முடியாதென்றும் தெரிவித்து, 31.08.2023-ம் தேதி காலையில் பேரூராட்சி அலுவலகம் வந்து மேற்படி லஞ்சப்பணம் ரூ.5,000/- ஐ கொடுத்துவிட்டு ரசீதை வாங்கிக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். மேலும் பேரூராட்சிக்கு செலுத்தவேண்டிய ரூ.10,450/-ஐ 30.08.2023 அன்றே செலுத்திய போதிலும் லஞ்சமாக ரூ.5,000/-ஐ கொடுத்தால் மட்டுமே மேற்படி அரசுக்கட்டணத்திற்கான ரசீதையம், வீடு கட்டுவதற்கு கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்கான ஏற்பாட்டினை செய்து தரமுடியுமென கோவை மாவட்டம் சூளேஸ்வரன்பட்டி பேரூராட்சி அலுவலக நடராஜ் தெரிவித்துவிட்டதால், லஞ்சம் கொடுத்து தனது வீட்டை கட்டுவதற்கான கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்கு விருப்பமில்லாத புகார்தாரர், கோயம்புத்தூர் லஞ்ச ஒழிப்பு துறையில் 31.08.2023-ம் தேதி புகார் கொடுத்தார். மேற்படி புகாரின்பேரில் வழக்கு பதிவுசெய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்பேரில் லஞ்ச ஒழிப்புத்துறையினரின் ஆலோசனையின்படி, புகார்தாரர் 31.08.2023-ம் தேதி மாலை கோவை மாவட்டம் சூளேஸ்வரன்பட்டி பேரூராட்சி அலுவலகம் சென்று திரு.நடராஜை சந்தித்துள்ளார். அப்போது திரு.நடராஜ் மேற்படி ரசீதையும், வீடு கட்டுவதற்கான கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்கான ஏற்பாட்டினை செய்துதருவதற்காக லஞ்சப்பணம் ரூ.5,000/-த்தை கொண்டுவந்துள்ளீரா என புகார்தாரரிடம் கேட்டுள்ளார். அதற்கு புகார்தாரரும் கொண்டுவந்தள்ளதாக தெரிவித்துள்ளார். உடனே திரு. நடராஜ், அப்பணத்தை அவ்வலவலகத்தில் பணிபுரியும் ஒப்பந்த ஊழியர் திருமதி.S.சசிகலா என்பவரிடம் கொடுக்கும்படி தெரிவித்துள்ளார். அதன்படி மேற்படி ஒப்பந்த ஊழியர் திருமதி.சசிகலா கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்கான ஏற்பாட்டினை செய்து தருவதற்காக லஞ்சப்பணம் ரூ.5,000/-த்தை திரு.நடராஜ் அறிவுறுத்தியதின் பேரில் புகார்தாரரிடமிருந்து வாங்கியபோது மறைந்திருந்த கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினரால் திருமதி.S.சசிகலா என்பவரை கையும் களவுமாக பிடித்து விசாரித்துள்ளனர், விசாரணையில் திருமதி.சசிகலா மேற்படி ரூ.5,000/-த்தை திரு.நடராஜ் அறிவுறுத்தியதின் பேரிலேயே புகார்தாரரிடமிருந்து வாங்கியதாகவும் ஆனால் அப்பணம் குறித்து தனக்கு எதுவும் தெரியாதெனவும் தெரிவித்துள்ளார். பின்னர் இதுகுறித்து மேற்படி பேரூராட்சியின் குடிநீர் அளவுமானி கணக்கீட்டாளர் திரு.N.நடராஜ், என்பவரை கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினர் விசாரித்து கைது செய்துள்ளனர்.